**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE SUB COURT, KARAIKAL**
**MACTOP. No. 36 /2024**
**Deposition of Witness: PW -1**

| | |
|---|---|
| **Name** | : **Hawa kani** |
| **Father's / Husband's Name** | : **Ismail** |
| **Religion** | : |
| **Village** | : |
| **Taluk** | : **Karaikal** |
| **Profession** | : |
| **Age** | : **62 /2025 Years** |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 14.11.2025 the evidence is recorded.**

**முதல் விசாரணை**

நான் இம்மனுவில் மனுதாரர் ஆவேன். நான் இன்று இந்த வழக்கில் சத்திய பிரமான நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். எனது முதன்மை சாட்சிய சத்தியப் பிரமாண ஆவணத்தில் கண்டுள்ள சங்கதிகள் என்னால் சொல்லப்பட்டவை. அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். நான் தாக்கல் செய்த நிருபண வாக்குமூலத்தை எனது தரப்பு முதல் விசாரணையாக ஏற்றுக்கொள்ள பிரார்த்திக்கிறேன். எனது முதன்மை சாட்சியத்தின் இறுதியில் தெளிவாக விவரித்துள்ள **10** ஆவணங்களை **ம.சா.ஆ.1** முதல் **ம.சா.ஆ.10** வரையிலான ஆவணங்களாக குறியீடு செய்கிறேன். மருத்துவ குழுமத்தால் எனக்கு வழங்கப்பட்டுள்ள **70 விழுக்காடு (Right leg , Amputee below knee)** ஊனச்சான்றிதழ் நீ.ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**1ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

(தோன்றா தரப்பினர்களாக இருந்து வருகின்றார்கள்)

**2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

விபத்து சமயத்தில், எனது கணவர் இஸ்மாயில் ஒட்டிய இருசக்கர வாகனத்தில் பின்னால் அமர்ந்து பயணம் செய்தேன் என்றால், சரிதான்.

விபத்து சமயத்தில், இருசக்கர வாகனத்தினை ஒட்டிய எனது கணவர் தான், என்னிடம் பேசிக் கொண்டே அதிவேகமகாவும், கவனக்குறைவாகவும் இருசக்கர வாகனத்தினை ஒட்டி சாலையில் பள்ளம் உள்ளதை கவனிக்காமல், அதில் தானாக விழுந்து விபத்தினை ஏற்படுத்திக்கொண்டார் என்றாலும், அச்சமயத்தில் சாலையில்

வந்த முதல் எதிர்மனதாரர் ஒட்டிய லாரி தவறாக குற்ற வழக்கில் சேர்க்கப்பட்டுவிட்டது என்றால், சரியல்ல.

விபத்தினை ஏற்படுத்தியதாக நான் கூறும் லாரி வாகனத்திற்கு சேதாரங்கள் எதுவும் இல்லை என டிஎன் 51 ஏஆர் 4999 என்ற பதிவெண் கொண்ட லாரியின் மசாஆ4 மோட்டர் வாகன ஆய்வறிக்கையில் பதிவாகியுள்ளது என்றாலும், அதற்கு காரணம் லாரி வாகனமானது விபத்திலேயே ஈடுபடவில்லை என்றாலும், சரியல்ல.

வழக்கு விபத்தானது வாஞ்சூர் சாலையில், ராயல் ஒயின் சாப் எதிரிர் நடைபெற்றது என்றால், சரிதான்.

விபத்து நடைபெற்ற இடத்தில், சாலையில் மின்விளக்குகள் இல்லை என்றால், சரிதான்.

இவ்வழக்கில் நான் தாக்கல் செய்துள்ள மசாஆ5 மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் எனது கணவர் ஒட்டிய இருசக்கர வாகனத்தின் முன் பகுதியில் மட்டுமே சேதாரங்கள் உள்ளதாக இயக்கவூர்தி ஆய்வாளர் பதிவுசெய்துள்ளார் என்றாலும், நான் கூறுவது போல இருசகக்கர வாகனத்தின் பின்புறத்தில் லாரி மோதியிருந்தால், இருசகக்கர வாகனத்தின் பின்புறத்தில் மட்டும் தான் சேதாரங்கள் ஏற்பட்டு இருக்கும் என்றாலும், இருசகக்கர வாகனத்தில் முன்புறத்தில் சேதாரங்கள் ஏற்பட்டு இருக்காது என்றால், சரியல்ல, லாரி இருசகக்கர வாகனத்தின பின்புறத்தில் தான் மோதியது, அந்த விசையினால் நாங்கள் கீழே விழுந்து இருசக்கர வாகனம் முன்புறத்தில் சேதாரங்கள் ஏற்பட்டது.

நான் பயணித்த இருசகக்கர வாகனத்தில பின்புறத்தில்சேதாரங்கள் இல்லை என்றால், சரியல்ல.

விபத்து சமயத்தில், என் மீது மோதியதாக கூறும், டிஎன் 51 ஏஆர் 4999 என்ற பதிவெண் கொண்ட லாரி வாகனத்தின் ஒட்டுனரான முதல் எதிர்மனுதாரருக்கு முறையான ஒட்டுனர் உரிமம் இருந்தது என்றாலும், லாரி வாகனமானது 3வது எதிர்மனுதாரர் காப்பீடு நிறுவனத்தில், காப்பீடு எடுக்கப்பட்டு இருந்தது என்றாலும் அதனால் எனக்கு ஏதேனும் இழப்பீடு கிடைப்பதாக இருந்தால், 3வது எதிர்மனதாரர் காப்பீடு நிறுவனம் தான் வழங்கவேண்டும் என்றால், சரியல்ல.

2ஆம் எதிர்மனுதாரருக்கு எதிரான வழக்கு தள்ளுபடியாக வேண்டும் என்றால், சரியல்ல.

**<u>3ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

விபத்து சமயத்தில் நான் தலைக்கவசம் அணிந்திருக்கவில்லை என்றால், சரியல்ல.

விபத்து என் கணவரின் கவனக்குறைவினால் ஏற்பட்டது என்றாலும், விபத்தினை ஏற்படுத்திய தீங்கிழைத்தவர் என் கணவர் என்பதால் நான் இழப்பீடு கோரமுடியாது என்றாலும், சரியல்ல.

நான் அரசு மருத்துவமனையில் இலவசமாக சிகிச்சை எடுத்துக்கொண்டேன் என்றால், சரிதான். ஆனால் உணவு, உதிவியாளர் மற்றும் போக்குவரத்து ஆகிய செலவீனங்கள் ஏற்பட்டன.

எனக்கு ஏற்பட்டுள்ள ஊனத்திற்கு 40 சதவீத அளவிற்கு மட்டுமே ஊனச்சான்றிதழ் வழங்கியிருக்க வேண்டும் என்றாலும், மருத்துவ குழுமமானது சரியாக கருத்தில் கொள்ளாமல், முழங்காலுக்கு கீழே கால் நீக்கப்பட்டுள்ளதற்கு மிகைப்படுத்தி 70 சதவீதம் என வழங்கியுள்ளது தவறு என்றால், சரியல்ல.

விபத்தினை ஏற்படுத்தியதாக கூறும் நான் கூறும் டிஎன் 51 ஏஆர் 4999 என்ற பதிவெண் கொண்ட லாரி வாகனமானது தமிழ்நாட்டில் பதிவு செய்யப்பட்ட வாகனம் என்பதால், அதனை காரைக்காலில் இயக்குவதற்கு அனுமதி பெறப்பட்டு இருக்கவில்லை என்பதால், காப்பீடு விதிமீறல் ஏற்பட்டுள்ளது என்றால், சரியல்ல.

விபத்து சமயத்தில், என் மீது மோதியாக கூறும் லாரி வாகனம் மண் ஏற்றி வந்தது என்றால், சரிதான்.

லாரி அதிக லோடு ஏற்றி வந்ததால் தான் விபத்து ஏற்பட்டது என்றாலும், அந்த வகையிலும் காப்பீடு விதிமீறல் ஏற்பட்டுள்ளது என்றால், சரியல்ல.

எனது மனுவிலும் சாட்சியத்திலும், எனது தொழில் மற்றும் வருமானம் குறித்து தவறான தகவல்களை, அதிக இழப்பீடு பெறவேண்டி மிகைப்படுத்தி கூறியுள்ளேன் என்றால், சரியல்ல.

வழக்கு விபத்தானது 6.6.2023ஆம் தேதியில் நடைபெற்றது என்றால். சரிதான். இழப்பீடு கோரும் இம்மனுவினை 4.1.2024ஆம் தேதியில் தாக்கல் செய்துள்ளேன் என்றால். சரிதான். மோட்டார் வாகனச் சட்டத்தில் திருத்தம் கொண்டுவரப் பட்ட நாளான 1.4.2022 ஆம் தேதியில் இருந்து 6 மாதங்கள் உள்ளாக இம்மனுவினை தாக்கல் செய்யாத காரணத்தினால். மோட்டார் வாகனச் சட்டத் திருத்தத்தின்படி. இம்மனுவானது தள்ளுபடி செய்ய உகந்தது என்றால். சரியல்ல, காயம் அடைந்த சிகிச்சையில் இருந்த நான் வழக்கு தாக்கல் செய்வதற்கான ஆவணங்களை பெறுவதில் சிறது காலத்தாமதம் ஆகிவிட்டது.

நான் கோரியுள்ள இழப்பீடு மிக மிக அதிகம் என்றால், சரியல்ல.

எனது மனு தள்ளுபடியாக வேண்டும் என்றால், சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.